Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 181/2024 PW-5**

Name : விஜயக்குமார்
Father / Husband name : சதாசிவம்
Village : கொள்ளார்
Age : 42
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 01.04.2026

Accused present.Both side counsel present. Witnesss identified by HC 2735 Palanivel.

**முதல் விசாரணை**

நான் தற்போது கூலி வேலை செய்கிறேன். சுமார் 2 வருடத்திற்கு முன்னர் கொள்ளார் பேருந்து நிறுத்தம் அருகே பகல் 2 மணியளவில் நான் வந்தபோது கூட்டமாக இருந்தது. சண்டை என்று சொன்னார்கள். யார் யாருக்கு என்ன சண்டை என்று எனக்கு தெரியாது. ஞானபிரகாசத்திற்கும் போலிசாருக்கும் சண்டை என்று சொன்னார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

எதிரி எனது ஊர்க்காரர் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 14.11.2023 அன்று மதியம் 3.10 மணிக்கு எங்கள் ஊர் பேருந்து நிறுத்தம் அருகே நானும் ராஜேந்திரன், ஏழுமலையஆகியோர்கள் நின்றிருந்தோம் என்றும், அப்போது ஞானபிரகாசம் அவரின் அண்ணன் எத்திராஜிடம் அன்று மதியம் சுமார் 03.30 மணிக்கு சண்டை போட்டுக்கொண்டிருந்தார் என்றும், அப்போது செஞ்சி பக்கத்திலிருந்து வந்த உதவி ஆய்வாளர் அந்த சண்டையை பார்த்துவிட்டு ஞானபிரகாசிடம் ரோட்டில் சண்டைபோடாதிர்கள் என்றும், கலைந்துபோக

சொன்னதற்கு ஞானபிரகாசம் உதவி ஆய்வாளரை அசிங்கமாக திட்டி அவரது வலது கன்னத்தில் அடித்து உன்னை கொலை செய்யாமல்விடமாடடேன் என்று அடித்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் உங்களை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றுவதற்காக அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது, சொல் கேள்வி தான் என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.